# ஒரு நபர் எளிதாக நரகத்துக்கு செல்வதில்லை. அவர் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டு நரகத்தை அடைகிறார்

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?

WHAT SHALL I DO WITH JESUS CALLED CHRIST?

நவம்பர் 24, 1963 பிரன்ஹாம் கூடாரம் ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

59. கடைசி நாட்களைக் குறித்து தானியேல் கூறின அனைத்தும், எப்படி “தேவனை அறிந்தவர்கள் பிரபலமான காரியங்களைச் செய்வார்கள்” என்றும்; எத்தனையோ

வேதவாக்கியங்கள் நாம் வாழும் இந்நாளுடன் பொருந்துகின்றன.

இந்த பூமியில் பொல்லாத, வஞ்சகமான காலம் உண்டாகும் என்று வேதத்தில் கூறப்பட்டது. நமது காலத்தில் நிறைவேறி வருகிறது.

நீங்கள் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டுதான் நரகத்தை அடைகின்றீர்கள்

அவர்களுக்கு மேசியாவைக்காண ஒரு தருணம் அளிக்கப்பட்டது. ஆனால் அவர்களோ அவர்களுடைய மேசியாவை புறக்கணித்தனர்.



இன்றைக்கும் அதே காரியம் சம்பவிக்கிறது – அதே காரியம். நமக்குத் தருணம்

அளிக்கப்பட்டுள்ளது, ஏனெனில் முதலில் .... **அவருடைய நியாயத்தீர்ப்புக்கு முகாந்தரமில்லாமல் தேவனால் நியாயந்தீர்க்க முடியாது.**



சாலையில் வேகமாக காரோட்டி செல்லும் ஒரு குறிப்பிட்ட மனிதரை நீங்கள் நிறுத்தி, சாலையில் அந்த இடத்தில் ஒரு குழி உள்ளது. அந்த வேகத்தில் நீங்கள் சென்றால் விபத்துக்குள்ளாகி

கொல்லப்படுவீர்கள்" என்று எச்சரிக்கை செய்யப்படுகிறது.



60. அவர், "அர்த்தமற்றது. நான் என்ன செய்கிறேன் என்று எனக்குத் தெரியும்" என்று கூறுவாரானால், அவருடைய இரத்தப் பழி உங்கள் மேல் இருக்காது. ஏனெனில் நீங்கள் அவரை முழுவதுமாக எச்சரித்துவிட்டீர்கள்.



நல்லது, தேவன் தமது வார்த்தையின் மூலம் அதை தான் செய்கிறார். வரப்போகின்ற நியாயத்தீர்ப்புக்கு அவர் ஜனங்களை முழுவதுமாக

எச்சரிக்கிறார். அக்காலத்துக்கென்று வேதத்தில் முன்னுரைக்கப்பட்ட அடையாளங்களையும் அற்புதங்களையும் அவர் காண்பிக்கிறார். அவர் அவைகளைக் காண்பித்த போதிலும், ஜனங்கள் அதை காணாமல் கடந்து சென்று விடுகின்றனர்.

**ஒரு நபர் எளிதாக நரகத்துக்கு செல்வதில்லை. அவர் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டு நரகத்தை அடைகிறார்.**



நீங்கள் முதலில் ஒரு பொய்யை கூறின போது, அது தவறென்று அறிந்திருந்தீர்கள். நீங்கள் முதலில் ஒரு சிகரெட்டை புகைத்த போது, அது தவறென்று அறிந்திருந்தீர்கள். நீங்கள் முதலில் ஒரு பொல்லாப்பை செய்த போது அது தவறென்று அறிந்திருந்தீர்கள். உங்கள் மனச்சாட்சி.... அது தவறென்று

உங்களிடம் கூறினது. இருப்பினும் நீங்கள் தொடர்ந்து சிகப்பு வெளிச்சத்தைக் கடந்து, வேலியில் மோதிக் கொண்டீர்கள். நீங்கள் அசட்டுத் துணிவு கொண்டு, அதை எப்படியும் செய்ய வேண்டுமென்று எண்ணம் கொண்டு, உங்களை ஒரு பெரிய மனிதனாகக் காண்பித்துக் கொண்டீர்கள். பாருங்கள்? ஞாபகம் கொள்ளுங்கள். **நீங்கள் வழி நெடுக சண்டையிட்டுக் கொண்டுதான் நரகத்தை அடைகின்றீர்கள்.**

**நரகத்துக்குப் போவதென்பது எளிதல்ல. நீங்கள் சத்தியத்தைப் புறக்கணிக்க வேண்டும்.**



நீங்கள் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு, சிகப்பு வெளிச்சத்தைக் கடந்து செல்ல வேண்டும்.



61. நீங்கள் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு ...... சாலையில் எச்சரிக்கைகள் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் நீங்களோ உங்கள் சொந்த வழியில் செல்கிறீர்கள்.... மனிதன் இன்றைக்கு அப்படித்தான் செய்கிறான். அவனுக்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகம் தெரியும் என்னும் எண்ணம் உள்ளதால், வரப்போகும் நியாயத் தீர்ப்பைக் குறித்த எச்சரிப்பின் அடையாளங்களுக்கு அவன் செவி கொடுப்பதில்லை... கிறிஸ்துவைப் புறக்கணிப்பவர்கள்.

